நகராட்சியிலுள்ள பொதுச் சுகாதாரத்துறையினையும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கீழ்கொண்டுவரும் திட்டம்.

*வினா எண் 50—திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சியிலுள்ள மற்றதுறைகளை நகராட்சி நிர்வாகத்துடன் இணைத்ததுபோல், நகராட்சியிலுள்ள பொது சுகாதாரத் துறையினையும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கீழ் கொண்டு வரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்.

வருஷநாட்டையும்—வத்திராயிருப்பையும் இணைக்கும் வகையில் சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 51—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் வட்டத்திலுள்ள வருஷ நாட்டையும் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்திலுள்ள வத்திராயிருப்பையும் இணைக்கின்ற வகையில் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்பணியை 1982-83 ஆம் ஆண்டு மலைச் சாலைகள் திட்டத்தில் மேற்கொள்ள பரிசீலனை செய்யப்பட்டது. போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததன் காரணமாக இப்பணியை இவ்வாண்டில் மேற்கொள்ள இயலவில்லை.

பேரூராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வரும் மண்டல இயக்குநர்கள்.

*வினா எண் 52—திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பை கவனித்து வரும் மண்டல இயக்குநர்களின் எல்லை குறைந்தது இரண்டு மாவட்டங்களாக இருப்பதால் பேரூராட்சிகளின் அலுவல்களைத் திறம்பட கண்காணிக்க முடிவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அலுவலரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?